(செய்தித்தாளாகப்பதிவுசெய்யப்பட்டது)

விலை அணா 2

கண்ணகி

தேசிய தீவிர மாதமிருமுறை.

கண்ணகி
சந்தா விபரம்
ஒரு வருடம் 4–0–0
6 மாதம் 2–2–0
தனிப் பிரதி 0–2–0
ண்ணகி—மதுரை

எல்லா அதிகாரமும் மக்களுக்கே - நேதாஜி

ஒலி 4 | மதுரை, மன்மத—புரட்டாசி 1 (17–9–55) | அலை 8

காஷ்மீரைத் தாக்க

பாக். போர்ச்சுகல் கூட்டணி

போர்ச்சுகல் ஆதிக்கம் வகிக்கிற கோவா மீது இந்தியா பாய்கிறது—

அதற்குப் பதிலாக, இந்தியாவின் வசம் இருக்கிற காஷ்மீர் மீது பாய்வதற்கு பாகிஸ்தானும், போர்ச்சுகலும் கொம்பு தீட்டுகின்றன—

இந்தக் கூட்டணிக்கு மேற்கத்திய சக்திகளிற் சில பின்னணியில் நின்று சாவி கொடுத்து வருகின்றன—

நம்பத் தகுந்த செய்தியொன்று கூறுகிறது. மேலும் அச் செய்தி விவரித்திருப்பதாவது;—

கோவாவில் இந்தியத் தொண்டர்கள் சாத்வீக ரீதியில் பிரவேசித்த மாதிரி, காஷ்மீருக்குள் பாகிஸ்தானிகளைப் பிரவேசிக்கச் செய்ய, பாகிஸ்தானிகள் சிலர் திட்டமிட்டுள்ளனர். இதற்கு போர்ச்சுகலின் ஆதரவு—பாகிஸ்தான் சர்க்காரின் சம்மதம்!

இந்த இயக்கத்துக்குக் குல்லாய் மாட்டிக் கொண்டிருப்பவர் மேற்கு பாகிஸ்தான் கிறிஸ்துவத் தொழிலாளர் கழகத் தலைவர் ஜாபர் இக்பால்.

தமது இயக்கத்திற்கு ஆலோசனை கூறும்படி, இவர் கராச்சியில் உள்ள போர்ச்சுகல் ஸ்தானிகரை வேண்டியிருக்கிறார். மேலும் இந்த யோக்கியர், கோவாவில் பிரவேசிக்கும் இந்தியத் தொண்டர்களை எதிர்த்து விரட்டுவதற்கு, பாகிஸ்தானில் உள்ள கிருஸ்துவத் தொண்டர்களைக் கோவாவுக்கு அனுப்புவது பற்றியும் போர்ச்சுகல் ஸ்தானிகரிடம் யோசனை கேட்டிருக்கிறார்.

இவரும், இவரது கழகக் காரியதரிசி மார்க்கஸ் சதீக்கும் சமீபத்தில் கோவாவுக்குப் போய் வந்தார்களாம்—இவரே அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இது தவிர இந்த வீரர், தமது காஷ்மீர் பிரவேசத்திற்கு ஆசி தரும்படி பிரிட்டன் அரசி எலிசபெத்துக்கு ஆகஸ்ட் 27-ல் ஒரு வேண்டுகோள் விடுத்துமிருக்கிறார்.

எலிசபெத்துக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்:–

“பண்டித நேருவின் மதவெறி ஆட்சியில், இந்தியாவில் கிறிஸ்துவ மதம் ஆபத்துக்கு இழுத்துச் செல்லப்படுகிறது. நேருவின் தர்பார் கிறிஸ்துவ மதத்

[16-ம் பக்கம் பார்க்க]

பர்மாவில் பசும்பொன் தேவர்?

செயல் திட்டம்

பசும்பொன் திரு. உ. முத்துராமலிங்கத் தேவர், எம். எல். ஏ. அவர்கள், பர்மா தமிழ்ப் பெருமக்களால் அமைக்கப்பட்டுள்ள தேவர் வரவேற்புக் கமிட்டியின் அழைப்பின் மீது, அதி விரைவில் பர்மா செல்ல இருக்கிறார்கள்.

தேவரவர்கள் பர்மா செல்ல இந்திய அரசாங்கம் அநுமதித்து விட்டது, பர்மா அரசாங்க அநுமதிக்காகக் காத்திருக்கிறார்கள். வந்தவுடன் பர்மா பிரயாணம் தொடங்கும்.

தேவர் வரவற்புக் கமிட்டியினர், தேவரவர்கள் பர்மாவில் கலந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளுக்கு, ஒரு தற்காலிகத் திட்டத்தை 15 நாட்களுக்குத் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள்,

அது வருமாறு;—

முதல் நாள்: தேவரவர்கள் இரங்கூன் வந்து சேருகிற அன்று கப்பலில் வந்தால் துறைமுகத்திலும், விமானத்தில் வந்தால் விமான நிலையத்திலும் ஒரு மாபெரும் வரவேற்பு,

அதில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள். ஆயிரக் கணக்கில் தயாராகியுள்ள தொண்டர்கள் வரவேற்பு வைபவத்தை நேரிய முறையில் நடத்திக் கொடுப்பார்கள், பல சங்கங்களாலும், தென்னிந்தியப் பிரமுகர்களாலும், தேவரவர்களுக்கு மாலையணிவிப்பும், வரவேற்பிதழ் படித்தளிப்பும் நடைபெறும்.

விமான நிலையம் அல்லது துறைமுகத்தில் வரவேற்புகள் முடிந்தவுடன், பர்மா ஜனாதிபதி மாளிகை சென்று, பார்வையாளர் புத்தகத்தில் கையொப்பமிடுவது. பின்னர் வரவேற்புக் கமிட்டினர் ஏற்பாடு செய்துள்ள இடம் சென்று உணவு, ஓய்வு கொள்ளல்.

2-ம் நாள் : காலை: மேன்மை தங்கிய நேதாஜி அவர்கள் தங்கியிருந்த இடங்களையும், அவரது அரசாங்கம் செயல்பட்ட பகுதிகளையும், ஐ.என்.ஏ. நடவடிக்கை ஸ்தலங்களையும், மற்றும் இந்தியர் வாழ் பகுதி, பள்ளிகள், ஆலயங்கள், கழகங்கள் ஆகியவற்றைப் பார்வையிடல்.

மாலை: பொது மக்கள் வரவேற்பு—நகர மன்றத்தில். மதிப்பிற்குரிய இரங்கூன் மேயர் தலைமை தாங்குவார். இந்திய ஸ்தானிகரும், அதிகாரிகளும், பிரமுகர்களும், கலந்து கொள்ள அழைக்கப்படுவார்கள்.

தேவரவர்களுக்கு ஆங்கிலத்திலும்—தமிழிலும் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்படும்.

3-ம் நாள் காலை: மேன்மை தங்கிய இந்திய ஸ்தானிகர், அகில பர்மா தமிழர் சங்கம், அகில பர்மா இந்தியர் காங்கிரஸ், இந்தியர் பள்ளிகளின் அழைப்பின் மீது சென்று பார்வையிடல்,

மாலை: தமிழர்களின் சார்பில் நகர மன்றத்தில் பொதுக்கூட்டம். இரங்கூன் இராமகிருஷ்ண மடாலயத் தலைவர் தலைமையில் 'குறளும்—கீதையும்' என்பது பற்றி தேவரவர்களின் சொற்பொழிவு.

இரவு: பலதரப்பட்ட தென்னிந்தியக் கழகப் பிரதிநிதிகளுக்குப் பேட்டியளித்தல்.

4-ம் நாள் காலை: இந்தியாவின் கடைசி மன்னர் பஹதுர்ஷாவின் கல்லறை, ஸ்வேடகான்—கபாயே பகோடா (புத்தாலயங்கள்) ராமகிருஷ்ண மிஷின் மருத்துவ மனை, செவிடு—குருடு பள்ளிகள், குஷ்டரோக நிவாரண விடுதி ஆகியவற்றைப் பார்வையிடுதல்,

(இந்த இடங்களில் தேவரவர்கள் நினைவாக ஏதேனும் விரும்பியதை வழங்குவார்கள்)

மாலை: பாசிஸ எதிர்ப்பு மக்கள் சுதந்திரக் கழகத் தலைமை அலுவலகம் சென்று பார்வையிடல். அங்கு பர்மா சோஷலிஸ்ட் தலைவர்களையும். ஆசிய சோஷலிஸ்ட் அமைப்புத் தலைவர்களையும் சந்தித்தல், (விசேட ஏற்பாடுகளும், நியமனங்களும், மேன்மை தங்கிய ஜனாதிபதியையும், மேன்மை தங்கிய பிரதமர் யூநா வையும் கலந்து செய்யப்படும்)

5-ம் நாளும் 6-ம் நாளும்; மாந்தலே பிரயாணம், அகில பர்மா மாந்தலே கிளையின் வரவேற்பு

மாந்தலே மத்திய சிறையில் நேதாஜி உள்பட இந்தியத் தலைவர்கள் பலர் வதைந்த இடங்களைப் பார்வையிடல்,

(10-ம் பகசம் பார்க்க]

கோவாவில் பாக். பிரவேசம்!

● கோவாவில் இந்தியர்களுக்கு இழிவின் சிகரம்— டன்கிர்க் மாடலில் நடைபெற்றது!

எதிர்பாராத நிலையில் இங்கிலாந்தை நம்பி, ரஷ்யச் சுற்றுப் பிரயாணத்தில் தலையிட்டு, அதன்மூலம் உலக சமாதான தூதுவராக, உண்மையில்லாத ஒரு போலித் தரத்தை உயர்த்திக்கொண்டு அதே வேகத்தில் கோவாவையும் மீட்கலாம்என்று கனவு கண்டார் இந்தியப் பிரதமர் நேரு!

அக் கனவு நினைவாக மாறுவதற்குள்ளாக அரசியலில் ஒரு கானல் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

● அது தான் கோவாவில் பாக்கிஸ்தான் பிரவேசம்!

தற்போதைய நிலையில் கோவா, தனது நிர்வாகத்தை நடத்த முடியாமல் தயங்கி நிற்கிறதாம்—இந்தியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

● உண்மையோ, பாகிஸ்தானிடம் கோவாப் பிராந்தியத்தை எந்த முறையில் ஒப்படைப்பது என்ற சதி!

இதை மறைப்பதற்காகத் தான் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் அவசரக் கூட்டம், எதிர்பாராத நிலைமையில் கோவாப் போராட்ட வாபஸ் தீர்மானத்தை வரம்பு கடந்த அவமானத்தோடு நிறைவேற்றி இருக்கிறது.

பாக்கிஸ்தானின் பிரவேசம், கோவாவில் ஏற்கனவே ராணுவ உதவி—தபால் போக்கு வரத்து—உணவு உபகாரம்— விமானசர்வீஸ் பரிமாற்றம்—என்பதன் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இவைகள், அத்தனையும், பாக். ராணுவ ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்காவின் விமானங்களும், சாமான்களுமே ஆகும்.

● அவ்வாறுனல் அமெரிக்க ஏகாதிபத்யம் பிரிட்டனின் அநுமதியுடன் பாகிஸ்தானிலும் கோவாவிலும் நிர்மாணிக்கப்பட்டு விட்டது!

இது இந்திய சம்மதத்துடனு? என்பது தான் தற்போதைய பெருங் கேள்வி.

இதை மறைப்பதற்கு நேருவின் சாகசங்கள், சியாங் கே ஷேக்கின் பாதையில் நடைபெறுகின்றன.

அதற்கு உதாரணமும், காரணமும் எட்டு வருடங்களாகக் கிடைக்கப்

உ. முத்துராமலிங்கத் தேவர்,
எம். எல். ஏ.

பெற்றிருக்கிற மௌண்பாட்டன் மாடல் சுதந்திரம், இன்னும் தேசத்தின் எல்லையையே நிர்ணயிக்காமலிருப்பதாகும். அதுவும் சமாதானப் பிராந்தியங்களில் அல்ல—கலவரையிலேயே ஆரம்பித்து, கலவரத்தையே கைத் தொழிலாகக் கொண்டிருக்கிற பாகிஸ்தான் பிராந்தியத்தில்!

பாகிஸ்தான் கிழக்கு —மேற்கு என்ற இரண்டைக் கொண்டிருக்கிறது.

அதில், கிழக்குப் பாகிஸ்தானின் எல்லையின் நீளம் 2463 மைல்கள்—அதில் 1542 மைல்கள், இன்னும் எல்லை நிர்ணயமின்றி கோடு கிழிக்கப்படாமலே கிடக்கின்றன

மேற்கு பாகிஸ்தான் எல்லையின் நீளம், 1503 மைல்கள். அதில் எல்லை குறிக்கப்படாமல் இருக்கிற பகுதி 1499 மைல்கள்.

இதில் எந்தப் பிராந்தியங்களையும் எவரும் ஆக்ரமித்துகொள்ள வசதி இருக்கிறது. ஆனல் ஆக்ரமிப்பு என்ற அகராதியே காங்கிரஸ் சர்க்காருக்குப் புரியாது.

எதிரி ஆக்ரமிக்கிறபொழுது—எல்லை நிர்ணயிக்கப் படாததால்—எதிர்க்கவோ, அமெரிக்கத் தலைமையில் இயங்குகிற ஐ. நா. சபையின் பஞ்சாயத்தைக் கோரவோ யோக்கியதையற்ற நிலைமையில் கோரினலும், பூனையின் தோழன், பாலுக்குக் காவலாக இருந்ததுபோல் பாகிஸ்தானின் தோழனை அமெரிக்கா, இந்தியாவுக்கு என்ன நியாயத்தை வழங்கும் என்பது எல்லோருக்கும் விளங்கிய விஷயம்!

இதை நன்ருகத் தெரிந்துகொண்டும், எட்டு வருட ஆட்சியில் பல பிராந்தியங்களை பாகிஸ்தான் ஆக்ரமித்துக் கொண்டேவர, இன்னின்ன கிராமங்கள் கை மாறி விட்டன என்கிற செய்தியைக் கூடக் கொடாமல்

எல்லாம் ஸ்ரீ நல்லவை!
சண்முகா கபே
பிருமணுள் காபி கிளப்
புரோப்ரைட்டர்: ஆர். என். சண்முகம் பிள்ளை
290, ராமநாட் ரோட் :: மதுரை

பாகிஸ்தானேடு உறவையும் முறிக்காமல் அதைச் செய்யச் சொல்லி வேடிக்கை பார்க்கின்ற ஆங்கில சர்க்காரின் உறுப்பினனுக— காமன் வெல்த் மெம்பராக இந்தியாவைப் பிணைத்துக் கொண்டு உலக சமாதானத்திற்கு உத்தியோகம் பார்ப்பது இந்திய அரசாங்கத்தின் பலவீனம் மாத்திரம் அல்ல அதன் தேசத் துரோகம் என்று கூடத் துணிந்து சொல்லத் தோன்றுகிறது.

● போர்ச்சுகீசியரோடு போராட நினைத்த இந்தியா, பாகிஸ்தான் தலையீட்டைக் கண்டவுடன் பதுங்கி விட்டது!

இந்தக் கோழைத்தனம், ஆங்கிலேயருக்கு நன்ருகத் தெரியும்.

சமீபத்தில் அன்னிய நாட்டுக் கொள்கையைப் பற்றிப் பேசிய நேரு, இந்தியாவின் கொள்கையை விவரிக்காமல் உலகில் நடைபெறுகிற செய்திகளை மட்டும் விமர்சனம் செய்தார்.

இந்த விமர்சனத்தின் மூலம் உலகம் ஒரு சமாதானப் பாதையில் முன்னேறுவதாகவும் சொல்லிக் கொள்கிருர். இந்த மர்மமான செய்தியை இந்தியர்களை நம்பச் செய்து கொண்டே, இந்தியாவில் யுத்தம் வந்தால்,—திபேத்—நேபாளம் போன்ற பகுதிகள் இவர்களை விட்டுக் கைமாறி நிற்பதால்— டில்லிப் பிராந்தியம் பாதுகாப்பற்றது என்பதை யுணர்ந்து, அரசியல் தஸ்தாவேஜிகள், முக்கிய சாமான்கள் எல்லாம் செகந்திரா பாத் பிராந்தியத்திற்குக் கடத்திக்கொண்டு இதை மறைக்க, ஜனதிபதி ராஜேந்திரப் பிரசாத் தென்னிந்தியாவிலும் ஒரு வாசஸ்தலம் அமைக்கப் பிரியப்படுகிருர் என்ற அவலமான செய்தியைக் கொடுக்கிருர்கள்.

ராணுவ ரீதியாக நவீன ஆயுதங்களை இந்தியர்கள் இன்னும் பெறவில்லை—அஹிம்சை பேசுகிருர்கள்!

யுத்தம் வராது என்று முழக்குகிருர்கள். தாங்கள் நடுநிலைமை நாட்டைச் சேர்ந்தவர்கள்— எந்த முகாமிலும் பிணையமாட்டோம் என்று உறுதி சொல்லுகிருர்கள்.

இந்த நிலையில் தைரியமாக டில்லியில் அரசாங்கத்தை வைத்திருக்க ஏன் பயப்படுகிருர்கள்?

காஷ்மீரில் சலசலப்பு ஏற்பட்டால், டில்லி அருகாமையில் இருக்கிறது என்ற ஒரே காரணம் தான்.

● இதை எதிர்பார்க்கிற இந்திய அரசாங்கம், இதற்குக் காரணக்கருவியாகவுள்ள ஆங்கிலோ— அமெரிக்கரை நம்புவதன் மர்மம் என்ன?

இந்த மர்மம், நீடிக்காது!

● இம்பால் முனையில் நேதாஜி போர்புரிந்த காலத்தில் வேவல் மகா நாட்டில் யுத்தத்துக்கு ஒத்துழைக்கத் தயார் என்று காந்தியின் தலைமையில் ஒப்பந்தத்துக்கு வந்த காங்கிரஸ் கூட்டம் தான் இன்று இந்தியாவை ஆளுகிறது.

அந்த ஆளுகை, இந்த முறையைக் கையாளாமல் வேறு என்ன லட்சணத்தில் இருக்க முடியும்?

முனிசிபல் தேர்தல்.

இந்த அலங்கோல நிலையில் அரசாங்கம் இருக்கிறபொழுது, அரசாங்கத்தைச் சேர்ந்த கட்சியினர், தங்களுக்கு எதிர்ப்பே இல்லை—எல்லாம் காங்கிரஸ் மயமாகிக் கொண்டே வருகிறது என்று பகற் கனவிலேயே வாழ்கிருர்கள்.

அரசியல் முடிவான மாறுதலை, ராணுவ ரீதியாகத் தான் பெறும்.

இடைக் கிடை உள்நாட்டு மாறுதல்கள் பதவி வேட்கையின் மூலம், பல மாற்றங்களை அடையும்.

பதவியை விரும்புகிறவர்களை காங்கிரஸ் என்று பெயர் மட்டும் சொல்லிக் கொண்டால், பதவியைத் தருகிறேம் என்ற முறையைக் கையாண்டு, முதல் ஐந்தாண்டு திட்டத்தையும் நிறைவேற்றி விட்டது காங்கிரஸ்.

இப்பொழுது அந்த முறையும் நழுவி, சில இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்களைப் போட்டும், சில இடங்களில் ஜெயித்து வந்தவரின் சேர்க்கையை நம்பி செயலாற்றலாம் என்றும் தளர்ந்த பாவனையில் தடுமாற ஆரம்பித்திருக்கிறது தற்போதைய முனிசிபல் தேர்தல்!

இதன் காரணமாக பல காங்கிரஸ்காரர்கள் ராஜிஞமா செய்துவிட்டு எதிர்த்து நிற்பதும், விருதுநகர் போன்ற இடங்களில் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் காங்கிரசிலே அபேட்சை மனுப் போட்டு, இடையில் வாபஸ் வாங்கிக்கொண்டு ஓடிய பரிதாபமும் காங்கிரசின் கடைசிக் காட்சிகளாகக் காண்கின்றன.

இருந்தாலும், மானம் தேவையில்லை—கொள்கை தேவையில்லை— அதிகாரம் முடிந்தவரை நீடிக்கட்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டது காங்கிரஸ்! இதன் எல்லைதான், இந்தியாவின் சுபிட்சமும், ஆசியாவின் விடுதலையும் ஆகும்!

அந்த நாளை விரைவில் எதிர்பார்ப்போமாக!

ஜெய்ஹிந்த்!

*

V.K
ஸன்பிளவர் சோப்
சலவைக்குச் சிறந்தது!
ஸன் பிளவர் சோப்
வாங்கி உபயோகியுங்கள்
வி. கே. சன்ஸ்
[பி. ஐ. டபிள்யு. லிமிடெட்]
80, மேலாவணி மூல வீதி, மதுரை
எங்கும் ஏஜண்டுகள் தேவை.

காமன்வெல்த் உறவு– நேருவுக்கு மாலை போடத்தானா?

பிரிட்டனின் உறவை விட, அதன் பகையில்த் தான் இந்தியாவிற்கு நன்மை அதிகம் என்று நேதாஜி–சொன்னார்.

பிரிட்டனின் உறவில்த் தான் இந்தியாவின் பாதுகாப்பு இருப்பதாக நேரு சொல்கிறார்.

நடப்புகளைப் பார்க்கிறபோது நேருஜியின் சொல் எழுத்துக்கு எழுத்து தவறி நிற்பது வெள்ளையாகத் தெரிகிறது.

நேருஜி ஆதிக்கம் செலுத்துகிற இந்தியாவும் நேதாஜி மூச்சுக்கு மூச்சு வெறுக்கிற பிரிட்டன் ஆட்சியும் காமன்வெல்த்தின் பெயரால் இன்று நேசநாடுகள்.

இந்த நேசத்தின் லட்சனத்தை எந்தக் கண்ணாடியால் பார்ப்பது என்றே விளங்கவில்லை.

நேச நாடுகள் என்றால் ஒன்றையொன்று மேம்படுத்தி உதவிக் கொள்ள வேண்டும். உதவிக்கு வசதி இல்லா விட்டால் கெடுதல் புரியாமலாவது இருக்கவேண்டும்.

ஆனால் இந்தியாவுக்கு நேசநாடான பிரிட்டன், கோவா விவகாரத்தில் என்ன செய்கிறது?

ஒரு புறம்நேருவுக்கு மாலைபோட்டு வரவேற்கிறது. விருந்துவைக்கிறது. அவருடைய செல்வாக்கை பயன்படுத்திக்கொள்கிறது.

மறுபுறம் இந்தியாவுக்கு எதிராக போர்ச்சுகலுக்கு திமிரூட்டி வருகிறது.

இது சாதாரண அரசியல் வாதிகளுக்குகூட விளங்குகிறது. ஆனால் எல்லாம் தெரிந்து உலகையே உள்ளங்கையில் வைத்திருப்பதாய் கூறிக் கொள்கிற நேருவுக்கு விளங்கவில்லையோ, அன்றி விளங்கிக் கொண்டே எல்லோரையும் விளங்காதவர்களாக்குகிறாரோ தெரியவில்லை.

கோவா பிரச்னையில், போர்ச்சுகல் மட்டும்தான் தன்மூப்பாய்த் திமிறுகிறது. பிரிட்டனின் தலையீடு அதில் இல்லை- என்ற மாதிரியில் நேரு கூறி வருகிறார். ஆனால் கோவா விஷயத்தில் இந்தியாவை இங்கிலாந்து முழுதுமே எதிர்த்து நிற்கிறதுஎன்பதற்கு இதோ ஆதாரங்கள்:

ராய்டர் செய்தி ஸ்தாபனம் கொடுத்து **மார்னிங் ஹெரால்டு டெலிகிராப்** என்ற பத்திரிகைஎழுதியிருப்பவை:-

இந்தியச் சத்தியாக்கிரஹிகளை கோவா கிராம மக்கள் வெறுக்கின்றனர். ஆகஸ்ட் 15-ல் பிரவேசம் செய்த அவர்களை கிராம மக்கள் தடியால் அடித்து, அவர்கள் வைத்திருந்த இந்திய தேசியக் கொடிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் பறித்துக் கொண்டு விரட்டி விட்டனர்.

டெயிலி எக்ஸ்பிரஸ் எழுதி இருப்பது:

நேருவின் இந்தியா போர்ச்சுகலின் கோவாவைக் கபளீகரிக்கப்பார்க்கிறது.

ரெக்கார்டர் என்ற பத்திரிகை எழுதி இருப்பவை:

போர்ச்சுகீஸிய அரசாங்கத்தையும் கோவா மக்களையும் நேரு கெடுபிடி போருக்கு இழுக்கிறார். இதுதான் நேருவின் ஆக்ரமிப்பு நோக்கத்தின் ஆரம்ப எடுப்பு.

‘‘கிளாஸ்கோ ஹெரால்டு’ எழுதிஇருப்பது:

இந்தியாவின் கொள்கை நடுநிலைமை என்கிறார் நேரு. ஆனால் அது ஆக்ரமிப்பின் அர்த்தத்தைத்தான் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

‘‘லண்டன் டைம்ஸ்’’ விவரித்திருப்பவை:

சத்தியாக்கிரஹிகள் பெயரால் இந்தியாவிலிருந்து கோவாவிற்குள் பிரவேசித்துக் கைதாகி இருக்கும் தலைவர்கள் இந்தியாவின் கொள்ளைக்காரர்கள். இம்மாதிரி கோவா பிரவேசத்தை சகிக்க முடியாது என்று பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய யூனியனுக்கு எச்சரித்துவிடவேண்டும்.

பிரிட்டனின் ஆளுங் கட்சிக்கு சொந்தமான **‘டெய்லிடெலிகிராப்’** (தினத்தந்தி) பிரசுரித்திருப்பதாவது:

அறப்போர் என்பதன் பெயரால் நாஜிகளின் முறையில் இந்தியா கோவா மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒரு நாட்டின் மீது படை எடுப்பென்றால் அதற்கு சமாதானம் என்றா பெயர்? சமாதானமான படை எடுப்பு எங்கேனும் நடந்ததுண்டா? கோவா விஷயத்தில் இந்தியா செய்வது கொடுமை- அநீதி, நாஜி ஜெர்மானியர்களை நமக்கு நினைவு படுத்துகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடனுக்குஅதிகத் தொடர்புள்ள **“யார்க்ஷையர் போஸ்ட்’’** என்ற பத்திரிகை விவரித்திருப்பதாவது;

மூவாயிரம் இந்தியர்கள் கோவாவுக்குள் பிரவேசிப்பது- அதற்கு அஹிம்சா நடவடிக்கைஎன்று பெயர் கொடுப்பது, இதெல்லாம் நேருவின் ஹம்பக்! விரும்பத்தகாத செயல்!! இம்மாதிரி நடவடிக்கையின் மூலம் நேரு ஹிட்லரின் யுத்த நளினத்தை கையாளுகிறார்.

இந்தியாவின் சுதந்திரத் திருநாளை இவ்வளவு மோசமான முறையில் கொண்டாட நினைத்தது பரிதாபகரமானதாகும்.

சமாதானவாதி என்ற பெயரை நேரு தனது அண்டைநாடான கோவா மீது தமது பிரஜைகளைப் படை எடுக்க விடுவதன் மூலம் கெடுத்துக் கொள்கிறார்.

கோவா, இந்தியாவுக்கு அருகில் இருப்பதற்காக அதன் உடமையாகி விடாது. கோவா மக்களில் அநேகர் கிருஸ்தவர்கள். அவர்கள் நேருவின் ஆட்சியை வரவேற்கவில்லை. மேலும் கோவாவிலிருந்து இந்தியாவுக்கு எத்தகைய ஆபத்தும் கிளம்பாது என்று போர்ச்சுகல் ஆட்சி உத்தாவாதமளித்துருக்கிறது. இந்நிலையில் நேருவின் இந்தியாவிலிருந்து அமைதியாக இருக்கும் அண்டை நாடான கோவா மீது சாத்வீகத்தின் பெயரால் படையெடுப்பது கொடுமை!

லண்டன் 'சண்டே டைம்ஸ்' தலையங்கம்:

நேரு, காந்தியின் சீடர். சௌரி சௌராவில் மகாத்மா நடந்து கொண்ட விதத்தை நினைவுபடுத்தி, மகாத்மாவின் பிரதிபலிப்பாக நேரு செயல்பட்டால் நல்லது.

அண்டை நாடான கோவா மீது படையெடுக்க நேரு, நேரடியாக எந்த இயக்கத்தையும் ஆரம்பிக்கவில்லை—தலைமை தாங்கி நடத்தவுமில்லை. ஆனால் அவருடைய அநுமதியின்றி இந்தியர்கள் கோவாப் பிரவேசஞ்செய்கிறார்கள் என்பதை நம்ப முடியாது.

கோவாவில் ஏதேனும் ரத்தக் களறி ஏற்பட்டால், அதன் முழுப் பொறுப்பையும் நேரு தான் ஏற்க வேண்டும்.

தம்மை ஒரு சமாதானவாதி என்று கூறிக்கொள்கிற நேரு, கோவாப் பிரவேசிகளுக்கு ஆசி கூறிக் கொண்டே இருப்பதால், அவர் அவரை ஹிட்லராக்கிக் கொள்கிறார்,

கோவா தமக்கு வேண்டுமென்கிறார் நேரு இது பிரதேச ஆசை தானே! இந்த ஆசையுள்ள ஒருவர், தன்னைச் சமாதானவாதி என்று சொல்லிக் கொள்வது உலகைக் கேலி செய்வதாக இருக்கிறது. அவர், அவரைப் பற்றி எப்படிக் கூறிக் கொண்டாலும், நம்மைப் பொறுத்தவரை. அவரின் கோவா ஆசை, அவரை நமக்கு ஹிட்லராக்கித்தான் காட்டுகிறது. அதிவிரைவில் நேருவே ஹிட்லராகவும் ஆகிவிடுவர்.

●●● இதுவரை பிரிட்டன் பத்திரிகைகளின் அபிப்பிராயத்தைப் படித்தீர்கள். இதன் மூலம் நமது காமன்வெல்த் உறவின் லட்சணத்தை அளவுபடுத்தியுமிருப்பீர்கள்.

காமன்வெல்த் உறவு, நேருவுக்கு மாலை போடத்தான் என்ற முடிவுக்கும் வந்திருப்பீர்கள்.

இவ்வளவு பச்சைத் துரோகம் செய்யும் பிரிட்டனைப் பற்றி நேதாஜி சொன்னது சரியா? நேரு செய்வது சரியா?

வெண் சங்கு
டிரேட் மார்க்
சீயக்காய்தூள்
எண்ணெய் குளிப்பிற்கு மேன்மையானது என்று
ஆற்றோரம் குளத்தோரம்,
கிணற்றோரம், குழாய்ஓரம்
எங்கும் இதே பேச்சுத் தான்.
எஸ். உரிமையாளர்:
பெத்தண்ண நாடார்
தஞ்சாவூர். போன் நீர். 108

சிங்கப்பூரில் நமது விற்பனையாளர்
ஏ. எம். ஷேக் சுலைமான்
151, பி. மார்க்கட் வீதி
சிங்கப்பூர்—1

நேதாஜியின் நெஞ்சோட்டம்!

தொகுத்தவர்:
சக்திமோஹன்
வைர வீரன் நேதாஜியின் கருத்துக் குவியலிலிருந்து பிரித்தெடுத்த பொன் மொழிகள்!
பசும்பொன்; உ. முத்துராமலிங்கத் தேவரவர்களின் முன்னுரையுடனும்
நேதாஜியின் தாய், தந்தையரின் படங்களுடனும்
டைரி சைஸ் 320 பக்கம்
விலை அணா 12
தனிப்பிரதி வேண்டுவோர் 1 ரூபாய் ஸ்டாம்பு அனுப்பவும்
விற்பனையாளர்களுக்கு 25 சதவீதம் கழிவு
கண்ணகி 80, மேலாவணிமூல வீதி மதுரை

சுடச்சுட

யு. எம். இருங்களாத் தேவர்— டி. உச்சப்பட்டி

கே:— நேதாஜியின் விலாசமென்ன?

ப:— *பண்டித நேரு மேற்பார்த்து நேதாஜி வசம் கொடுப்பது-புதுடில்லி*

கே:— பார்வர்டு பிளாக் கட்சி எப்பொழுது தோன்றியது? அதன் நோக்கமென்ன?

ப:— *1939-ல் தோன்றியது. வெள்ளையாட்சிக் கலப்பற்ற ஒரு பூரண சுதந்திரத்தைச் சாதிப்பது அதன் கொள்கை.*

கே:— உ. முத்துராமலிங்கத் தேவர் ஏன் அரசியலில் அதிகப் பங்கு பற்றுமல், மதத்தில் அதிகப் பற்றுக் கொண்டு விட்டார்?

ப:— *தாங்கள் நினைப்பது தவறு. அரசியல்தான் அவர் மூச்சு. அரசியலுக்கு ஒழுக்கமூட்ட மதமும் தேவைப்படுவதால், சில சமயங்களில் அதில் சம்பந்தப்படுகிறார்.*

கே:— மற்ற கட்சியினர் தங்கள் கட்சியைப் பரப்பும்போது பார்வர்டு பிளாக் மட்டும் சும்மா இருப்பதன் நோக்கமென்ன?

ப:— *சும்மா ஒன்றும் இருக்கவில்லை. காலப் போக்கில் அதன் சக்தியை அறியலாம். அது சந்தாச் சேர்த்துப் பேசும் கட்சி அல்ல. நாட்டிற்குத் தேவையானதை காலமறிந்து செய்யும் கட்சி.*

கே. யஸ். மணிராஜன்—மதுரை.

கே:— ஷேக்ஸ்பியரைப்போல் நம் நாட்டில் நாடகக் கலைஞராக எவரைக் குறிப்பிடலாம்?

ப:— *ப. சம்பந்த முதலியார், டி. டி. சங்கரதாஸ் சுவாமிகள் ஆகியோர்.*

கே:— புலவர் உலக ஔவையார்கள் எத்தனை பேர்? அவர்கள் எவ்வெக் காலத்தவர்கள்?

ப:— *நான்கு ஔவையார்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் எந்தெந்தக் காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதற்கு சரியாக வரையறை செய்ய இயலவில்லை.*

கே:— இன்றைய உலக நிலை என்ன?

ப:— *கலகம்.*

எஸ். எம், கலாமணி-மதுரை.

கே:— சக்தி அழியாதது என்கிறேன் நான், உங்கள் கருத்து என்ன?

ப;— *அதுவே தான்.*

கே:— மொழி கடவுளை உண்டாக்கியதா? கடவுள் மொழியை உண்டாக்கினாரா?

ப:— *நாஸ்திக வாதப்படி மொழிதான் கடவுளை உண்டாக்கிற்று. ஆஸ்திகவாதம், கடவுள் தான் மொழியை உண்டாக்கினர் என்கிறது.*

கே:— திருவள்ளுவர் கருத்தைப் பொய்ப்பித்து தம் கருத்தை மெய்ப்பித்த புலவன் யார்?

ப:— *ஒருவருமே இல்லை-*

கே. சங்கர் [புத்திசாலி]- மதுரை

கே:— திருவள்ளுவர் எப்படிப்பட்ட ஆட்சியை விரும்பினர்?

ப:— *எல்லோரும் இன்புற்றிருக்கும் ஆட்சியை.*

கே,— அறஞ் செய விரும்பு என்று ஔவையாரும், அறத்தால் வருவதே இன்பம்......... என்று வள்ளுவரும் பாடியிருக்கும் பாட்டுகளில் எது சிறந்தது?

ஸ்தாபிதம் 1906.

ரிஜிஸ்டர்ட். நிர். 139255

பிலி மார்க் சர்பத்

47, அம்மன் சன்னதி,
மதுரை.

ஸ்தாபகர்:
K. ஒண்டிப்பிலியா பிள்ளை.

புரோப்ரைட்டர்:
K ஒண்டிப்பிலியா பிள்ளை சன்,
K. O. சுப்பிரமணிய பிள்ளை

துள்ளியவர்கள் எங்கே

கோவா விடுதலைக்காக இந்தியர்கள் சத்யாக்ரஹம் செய்வதை அகில இந்தியக் காங்கிரஸ் ஆதரிக்க வில்லை—ஆக்ஷேபித்து விட்டது!

சாத்வீக முறையில் நடவடிக்கை எடுக்கப்படுமாம்– எடுக்கட்டும்.

ஆனால் இதுவரை இத்தனை பேர்களை சத்யாக்ரஹத்தின் பெயரால் சாவதற்கு அநுமதித்தது ஏன்?

அனல் வீசப் பேசிய நேரு, செயலில் ஐஸ்கட்டியாகி விட்டார்.

கோவாவை விடுவிக்க காங்கிரஸ்காரர்கள் போராட்டத்தில் இறங்க அநுமதிக்கவில்லை காங்கிரஸ் மேலிடம்.

தொண்டர்களின் துணிவால் கோவா விடுதலையடைந்து விட்டால், கோவாவின் ஆட்சியை வகிக்க காங்கிரஸ் மேலிடம் முந்தி வருமா? அன்றி அதை விடுவித்தவர்களிடமே விட்டு விடுமா?

கோவா விவகாரத்தில் காங்கிரசின் வீரமெல்லாம் பேச்சை விட்டுப் பெயராது என்று நாம் ஆரம்பத்திலேயே கூறினோம். அது இன்று வெட்ட வெளியாகி விட்டது.

வெள்ளையர் சம்பந்தப்பட்ட எதிலும் காங்கிரஸ் கொள்கை, சுயமரியாதையை விகாரப் படுத்திக் கொள்ளக் கூடாக் கூசாது என்பதற்கு காங்கிரஸ் தீர்மானம் ஒரு எடுத்துக்காட்டு!

ஈ. வே ரா. பெரியார் கொடி எரிப்பேன் என்று அறிக்கை தான் விடுத்தார்- ஒரே அமர்க்களப் படுத்தினோம்-போலிஸ்நடவடிக்கைக்குக் கூடத் தயாராகினோம்!

கொடியை அவமதித்து விட்டார்கள் என்று மாணவர்களைச் சுட்டும் தள்ளினோம்.

ஆனால் கோவாவில் போர்ச்சுக்கீசியர் என்ன செய்கிறார்கள் தெரியுமா?

நமது மணிக் கொடியை— உலக சபையின் உச்சியில் மரியாதையோடு பறக்கும் இந்தியக் கொடியை மட்டும் போர்ச்சுக்கீசியர் அவமதிக்கவில்லை— நமது தேசிய கௌரவத்தையே முச்சந்தியில் நிறுத்திப் பங்கம் செய்கின்றனர்!

ப:— இரண்டுமே சிறந்தது தான். ஒரே கருத்தை இருவர் வெவ்வேறு முறையில் கூறியிருக்கிறார்கள்.

தா. மகா தேவன்— செஞ்சி.

கே:— ராஜா மகன் மந்திரியானால், மந்திரி மகன் என்னவாவது?

ப:— ராஜா வாவது.

எம். ஆர். தாரா— மதுரை.

கே:— படைபலம் அதிகம் என்று பறைசாற்றும் திரு. உ. முதேவரின் வருங்கால நிலை எப்படி இருக்கும்?

ப:— இருள் நீங்கிப் பிரகாசமாயிருக்கும்.

கே:— சுதந்திரப் போராட்டத்தை சிப்பாய்க் கலகமென்று சரித்திரத்தில் மாற்றியது ஏன்?

ப:— தொடை நடுங்கிகள் சரித்திரமெழுதினால் அப்படித் தானே இருக்கும்!

மா. வேத வல்லி—மயிலை.

கே:— இந்திய சர்க்கார் என்றால் என்ன?

ப:— நேருவின் சொந்தஎஸ்டேட்.

கே:— பெண்களுக்கு முதல் ஆபத்து எது?

ப:— அழகும், பருவமும்.

கொடிக்கு அவமரியாதை என்று ஒன்பது முழத்துக்குத் துள்ளினோமே, எங்கே அந்த துள்ளலும், வீரமும்?

இங்கே படபடத்துப் பாய்ந்த வீரம், கோவாவில் குனிந்து விட்டது ஏன்?

சினிமாப் பகுதி

நல்ல பெண்மணி

தோல்விச் சனியன் துள்ளி விளையாடும் இந்தப் படத்தில் நடித்தவர்கள் - படம் பிடித்தவர்கள் - பணம் போட்டவர்கள்- பாட்டுப் பாடியவர்கள் - மேக்கப் செய்தவர்கள் - ஏமாந்து போய்ப் பார்த்து நேரத்தை வீணாக்கியவர்கள் - திரையிட்ட தியேட்டர்காரர்கள் எல்லோருக்கும் நமது ஆழ்ந்த, பரிதாப கரமான அநுதாபம் உடைமையாகட்டும்!

நகரசபைத் தேர்தல்

வாக்காளர்கள் தேர்ச்சிக்கு ஒரு சோதனை

நகரசபைத் தேர்தல் வருகிறது.

போட்டியிடுவோரின் தொகை கணக்கைக் கடந்து நிற்கிறது.

சரியான இடது சாரிக் கட்சிகள் எதுவும் போட்டியிடவில்லை.

கட்சி என்ற முறையில் போட்டியிடுவது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான்.

காங்கிரசை எதிர்த்து நிற்போர் அனைவரும், கட்சி எதுவாயினும் சுயேச்சைகள்,

கடந்த கால அநுபவத்தையும் கடக்க வேண்டிய காலத் தேவையையும் சரியான முறையில் கணக்கிட்டு, ஒப்புயர்வற்ற தமது வாக்குகளைச் செலாவணியாக்க வேண்டிய கடமை வாக்காளரைச் சார்ந்ததாகும்!

உண்மையிலேயே வாக்காளர்களுக்கு இது ஒரு சோதனையும் கூட.

மக்களின் எண்ணங்களை எடுத்துக் காட்டுவதற்கு உள்ள ஒரே வாய்ப்பு இந்த வாக்களிப்பு ஒன்றுதான்.

எனவே அந்த வாய்ப்பைத் தக்க முறையில் பிரயோகிக்க வேண்டும். தவறிவிட்டால் அதன் மூலம் அமையும் கோளாரான நிர்வாகத்தை மக்கள் அநுபவித்துத் தீர வேண்டிய நிலை ஏற்படுவது போக, மக்களின் திறமையின்மைக்கு ஒரு அடையாளமாகவும் ஆகி விடும்.

கடந்த எட்டு வருட சுதந்திர வாழ்வில் மக்கள் தங்கள் வாக்களிப்பின் தவறுகளால் ஏற்பட்ட பலனை அநுபவித்திருக்கிறார்கள். இனியும் அந்தத் தவறுகள் அடியிட்டு விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வருகிற நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிதான் முழு மூச்சாய்ப் போட்டியிடுகிறது,

இது எதற்காகப் போட்டியிட வேண்டும் என்பதை மக்கள் கேட்டுக் கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் நாடாளும் கட்சி,

நகரசபை தனி. நகர மக்களின் தேவையைத் தீர்த்து வைப்பது ஒன்றுதான் இதன் முக்கிய வேலை.

நகர மக்களுக்குத் தேவையானவற்றைத் தீர்த்து வைக்க, நகரசபை அரசாங்கத்தின் உதவியை நாட வேண்டியது வரும்.

அந்த நிலையில் நகரசபை நிர்வாகமும், அரசாங்க நிர்வாகமும் ஒரு கட்சியிடமிருந்தால், நகர மக்களுக்குத் தேவையானதை நகரசபையை நிர்வகிக்கும் கட்சி தமது அரசாங்கத்தை அழுத்தமாக வற்புறுத்தாது.

அதோடு நகரசபை நிர்வாகம் ஒரு கட்சியிடம் சிக்கிவிட்டால், கட்சியின் கட்டுப்பாடு அங்கு முக்யத்வம் பெறுமே தவிர நகர மக்களின் தேவை ஒதுக்கப்பட்டு விடும்.

இதுவரை ஒரு ஆட்சியிடம் நகரசபை நிர்வாகம் இருந்ததன் பலன் மக்களுக்குத் தெரியும், அது நல்லதொரு பாடமாகவும் ஆகி இருக்கும்.

ஆகவே, நகரசபை நிர்வாகம் தனிப்பட்டோரிடமிருப்பது தான் மக்களுக்குச் சாதகம். ஒரு கட்சி அரசாங்கத்தைக் கட்டாயப் படுத்தி, மக்களின் தேவைகளைத் தீர்த்து வைப்பார்கள்.

காங்கிரஸ் ஆட்சியை அநுபவித்துப் பார்த்த மக்கள், நகராட்சியைச் சுயேச்சைகளிடம் ஒப்படைத்து அந்த அநுபவத்தையும் பெற வேண்டும்.

உண்மையில் காங்கிரசுக்கு தியாக புத்தியும், சேவா நோக்கமும் இருக்குமானால், நகரசபை நிர்வாகத்தில் தலையிடாமல் ஒதுங்கியே இருக்க வேண்டும்.

எதையும் விடுவதில்லை—எல்லாம் தம் மடியில்தானிருக்க வேண்டும் என்ற அதிகார போதை காங்கிரசிடம் மேலோங்கி வருகிறதே தவிர, குறைந்ததாக இல்லை.

இது தவிர, காங்கிரசுக்குத் தொடர்பற்றவர்கள், காங்கிரசை எதிர்த்தவர்கள், வெள்ளையாட்சியை மீண்டும் வரவேற்பவர்கள் எல்லாம் பணம் என்ற ஒரே தகுதியை வைத்து இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாகி இருக்கிறார்கள். உண்மையான காங்கிரஸ்காரர்கள் ஒதுக்கப்பட்டு, அவர்கள் சுயேச்சையாக காங்கிரசை எதிர்த்து நிற்கிறார்கள்.

காங்கிரசின் சார்பில் அட்ஹாக் கமிட்டி நிறுத்தியுள்ள அபேட்சகர்கள், அட்ஹாக் கமிட்டியினரின் விருப்பத்திற்குரியவர்களேயன்றி, மக்களின் சம்மதத்தைப் பெற்றவர்களல்ல.

காங்கிரசுக்காரரில் ஒரு சிலரின் நோக்கத்திற்கே அபேட்சகர்களை எடுப்பதென்ற எதேச்சாதிகார முறை பெருத்து வருகிறது.

இவ்வளவிற்கும் காரணம், மக்கள் தமது வாக்குகளின் தன்மையை உணராமல் உபயோகித்ததுதான். இது அந்தக் காலத்தோடு கரைந்து விடட்டும். எதிர்காலம் புதுமை பெறட்டும்.

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கூடுமானல் சிறைக் கைதிகள் முன் தேவரவர்களின் சொற்பொழிவும், இனிப்பு வழங்கலும். பின்னர் புகழ் வாய்ந்த பௌத்தாலயங்கள், கோட்டைகள், கோவில்கள் இதர முக்கிய இடங்களைப் பார்வையிடல்.

7-ம் நாள்: இரங்கூன் திரும்புதல். பல சங்கங்கள் வரவேற்பு.

மாலை: தென்னிந்தியக் குழந்தைகள் பொதுக் கூட்டம். பர்மிய—சீன—இதர இனக் குழந்தைகளும் அழைக்கப் படுவார்கள். கூட்டத்தை தேவரவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள். பர்மாவில் உள்ள ஐ. நா. குழந்தைகள் தொகுதித் தலைவர் பிரசங்கிப்பார். இந்திய ஸ்தானிகர் மே. த. சாக்சேனு தலைமை வகித்து குழந்தைகளுக்கு தின்பண்டங்கள் வழங்குவார்.

8ம்-நாள் காலை: இரங்கூன் நகர மண்டபத்தில் மாபெரும் பொதுக்கூட்டம். பர்மா மந்திரிகளில் ஒருவர் அல்லது தலைமை நீதிபதி தலைமை தாங்க வேண்டப்படுவார்கள். அக்கூட்டத்தில் "கிழக்கு—மேற்கு சந்திப்பு" அல்லது "ஆசிய விவகாரம்" என்பது குறித்துத் தேவாவர்களின் ஆங்கிலச் சொற்பொழிவு.

மாலை: ஸ்ராண்ட் ஹோட்டல் அல்லது யூனியன் கிளப்பில் வரவேற்புக் கமிட்டி சார்பில் தேநீர் விருந்து. இந்திய ஸ்தானிகர் தலைமை தாங்கும்படி அழைக்கப் படுவார். கனம் மந்திரிகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், பிரமுகர்கள் அழைக்கப் படுவார்கள்.

9-ம் நாள்: ஓய்வு.

10-ம் நாள்: மோல்மீன் நகரப் பயணம். அங்கு இரண்டு நாட்கள் தங்கல். அகில பர்மா தமிழர் சங்க மோல்மீன் கிளையின் வரவேற்பு.

11-ம் நாள்: இரங்கூன் திரும்பல்,

உண்மை உடைகிறது

கொரியாப் போரின்போது ஐ.நா. தரப்புத் தளபதியாக இருந்த மெக்கார்தர் ஒரு சோதா— அவரால் சீனப் படைகளை முறியடித் திருக்கவே முடியாது என்று அன்று அமெரிக்க ஜனுதிபதியாக இருந்த **ட்ருமன்** *செப். 8ல் சிகாகோ நகரில் வெளியிட்டிருக்கிருர், அதாவது:—*

"கொரியப் போரில் ஐ. நா. வின் தலைமைத் தளபதியாக இருந்த ஜெனரல் மெக்கார்தரை 1951—எப்ரலில் பதவியை விட்டு விலக்கினேன், ஆனல் அவரை இரண்டு வருடங்களுக்கு முன்பே விலக்கி இருக்க வேண்டும். அது தான் நான் செய்த தவறு".

கொரியப் போரில் 38-வது அட்சரேகையைத் தாண்டி யாலு நதிவழியாக ஐ. நா- படைகளை முன்னேற விடும்படி மக்கார்தர் சொல்லியதை என் தடுத்தீர்கள்? என்று நிருபர்கள் கேட்டதற்கு ட்ருமன் கூறியதாவது;

38—வது அக்ஷரேகையைக் கடந்து யாலு நதிவழியாக ஐ. நா. படைகளை முன்னேற அநுமதிக்கும்படி மக்கார்தர் கேட்கவுமில்லை— நான் மறுக்கவுமில்லை—அவ்வாறு மக்கார்தர் சொல்வது பெறும் புரட்டு.

அப்படியே அவர் கேட்டு, நான் அநுமதி கொடுத்திருந்தாலும் கூட, மக்கார்தரின் படைகள் 38—வது அக்ஷரேகையைத் தாண்டி ஒரு அடி கூட முன்னேறி இருக்க முடியாது. ஏனெனில், மக்கார்தருக்கும், யாலு நதிக்கும் இடையில் பலகோடி சீனப் படைகள் நின்றன- ஆகவே மக்கார்தரின் படைகள் 38—வது அக்ஷரேகைக்கு அப்பால் முன்னேறுவதை அன்று நினைத்திருக்கவே முடியாது.

மேலும் பல நிகழ்ச்சிகள் நடைபெறும், அவை தேவரவர்கள் பர்மா சேர்ந்தபின் நிர்ணயிக்கப் படும் என்று காரியதரிசி திரு. டேவிட் அறிவிக்கிருர்.

ஆசியாவின் பெரும் பகுதி
மக்களின் அறிமுகத்தைப்பெற்ற
நவீன இயந்திரத் தயாரிப்புகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

மதமும் சர்க்காரும்

ஏழைகளுக்கா? செல்வர்களுக்கா?

மூலம்: மார்க்சிம் கார்க்கி

தமிழில்: சக்திமோகன்

அவர் அரசாங்கத்தைப் பற்றி அவ்வளவு அலட்சியமாகக் குறிப்பிட்டது என்னைக் குலுக்கிவிட்டது.

மக்களுக்காகவுள்ள ஒரு அரசாங்கத்தை அந்தப் பணக்காரர் தனது சுண்டு விரலின் அசைவில் வைத்திருப்பது எனக்கு அதிசயமாக இருந்தது. அதிர்ந்தும்போனேன். அதிர்ச்சி தெளிய சில வினாடிகள் பிடித்தன. பிறகு சமாளித்துக் கொண்டு மக்கள் இம்மாதிரி கொள்ளையடிக்கப்படுவதை அரசாங்கம் தடுக்க வேண்டாமா? ஒரு வேளை உங்கள் நாட்டில் ஒருவர் நலனுக்காகப் பலரை அழிப்பது தனிப்பட்ட சங்கதியாக இருக்குமோ என்று கொஞ்சம் குத்தலாகக் கேட்டேன்.

அதற்கு அவர் அழிவா? என்று அதிசயத்தோடு என் கேள்வியையே எதிரொலித்துவிட்டு விழிகளை அகல விரித்தவாரே அழிவு என்பது தொழிலாளரின் ஊதியம் உயரும் போதோ அன்றி அவர்களின் வேலை நிறுத்தத்தின் போதோதான் ஆரம்பிக்கிறது. அப்படித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் எங்களிடம் பிற நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட தொழிலாளர்கள் எப்பொழுதுமே கைவசமிருப்பார்கள். அவர்கள் குறைந்த கூலிக்கு பழைய தொழிலாளரின் வேலையை மேற்கொள்ளச் சம்மதிப்பார்கள். குறைந்த கூலிக்கு வேலை செய்ய வேறு தொழிலாளர்கள் போதிய அளவு இருக்கிற போது அவர்கள் எங்கள் உற்பத்திப் பொருள்களை அதிக விலைக்கு வாங்குவார்கள். பிறகென்ன? எங்களுக்கு எல்லாம் நல்லதாய் முடிந்துவிடும். ஆனால் அதிகக் கூலி கேட்டு வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் தம்மைத்தாமே அழித்துக்கொள்கிறார்கள். இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?

இவ்வாறு கூறும்போதே அவர் முகத்தில் புதிய முறுக்கு ஏறிற்று. முதுமையில் தொய்ந்துபோன அவருக்கு இளமையின் பூரிப்புகூட கொஞ்சம் ஊறிவிட்டது ஓரம்காய்ந்த அவரது

> எண்ண அலைகளை எழுத்தால் வடிப்பதில் அதிமேதை மார்க்சிம் கார்க்கி. அவர் எழுத்தில் உண்மை பீறிட்டெழுவதையும், கற்பனையின் சுவை சொட்டுவதையும் வேண்டிய மட்டும் எடுத்து அநுபவிக்கலாம். கார்க்கியின் பேனாவிலிருந்து எத்தனையோ மகத்தான தத்துவங்கள்—மனிதச் சபலத்தைக் கலக்கும் போதனைகள்— வெளியேறி இருக்கின்றன. அதில் ஒன்று தான் இது. "ஒரு கோடீஸ்வரன்" என்ற தலைப்பில் கார்க்கி எழுதிய கதாம்சம் கலந்த கட்டுரையை சக்தி மோகன் தமிழாக்கி இருக்கிறார்.

குரல் சற்றே மேலேற ஆரம்பித்துவிட்டது. விரலில் அணிந்திருந்த மோதிரத்தை வேகமாய்ச் சுற்றியவாரே அந்த மனிதர் மேலும் தொடர்ந்து அப்புறம், என்னவோ கேட்டாயே அரசாங்கத்தைப்பற்றி... என்று என்னை நோக்கிக் கேட்டார். நான் பதிலே பேசவில்லை. ஒரு மாதிரியாய் முகத்தை சொடுக்கிவிட்டு;

அரசாங்கச் சங்கதி இருக்கிறதே அது வேடிக்கையான விஷயம். ஒரு நல்ல அரசாங்கம் மிக மிக முக்கியம் என்னைப் போன்றவர்கள் விற்கும் பொருளை, நாங்கள் வைத்த விலைக்கு வாங்கக்கூடிய மக்களை அந்த அரசாங்கம் உண்டாக்கி வைத்திருக்கவேண்டும். எங்கள் நோக்கம்போல் குறைந்த கூலிக்கு தொழிலாளர்களை எங்கிருந்தாவது வரவழைத்துக் கொடுக்க வேண்டும். பிறகென்ன? சோஷலிஸமே தேவை இல்லை. அரசாங்கம் மக்களிடம் அதிக வரி விதிக்க முடியாது. ஏனெனில் மக்கள் பணத்தை நாங்கள் பண்டங்கள் மூலம் வசூலித்து விடுகிறோம். அரசாங்கத்திற்கு நாங்களாகப் பார்த்து எதையாவது வரியாகக் கட்டினால்தான்! இது தான் நல்ல அரசாங்கம் இம்மாதிரி அரசாங்கம்தான் எங்கள் நாட்டில் நடைபெறுகிறது என்று கூசாமல் கூறினார்.

எனக்கு ஒரே வியப்பாக இருந்தது ஏதோ ஒரு அரக்க சாம்ராஜ்ய ராஜா மனித உருவில் வந்து என் கற்பனைக்கே எட்டாத ஒன்றை நடைமுறையில் நடப்பதாகச் சொல்வது மாதிரி இருந்தது. உண்மையில் அந்த நபரை பார்க்கப் பார்க்க எரிச்சலும், அருவருப்பும் என்னைமேவி என்னையே விகாரப்படுத்தி விட்டது. அவரது அரசியல் கருத்து தெளிவாகிவிட்டதால் மதத்தைப் பற்றி உங்கள் கருத்தென்ன? என்று கேட்டு, அவரை வேறு திசைக்கு இழுத்தேன்.

இந்தக்கேள்வி அவரைஎன்னவோ செய்திருக்கிறது. வளைந்திருந்த முழங்காலை நிமிர்த்தினார். விழிகள் மேல் புருவத்திற்குள் மறைந்தன. பிறகு திடீரென்று விறுவிறுப்பு! இத்தனைக்கும் பிறகு ஓங்கிய குரலில் அவர்: மதமா! அது மக்களுக்கு அவசியம் தான். நான் அதை நிஜமாகவே நம்புகிறேன். என்வரையில் நான் ஞாயிறு தோறும் மாதா கோவிலுக்குச் செல்கிறேன். மதத்தை நம்பும்படி மக்களுக்குப் போதிக்கவும் செய்கிறேன். இதில் நான் தவறுவதே கிடையாது என்றார்.

அதெல்லாம் சரி மதத்தைப்பற்றி என்னதான்சொல்லுகிறீர்கள்? என்று கொஞ்சம் வெடுக்கெனக் கேட்டேன்.

இக்கேள்வி கனமான வார்த்தை யாகிவிட்டது. குரலும் கூடிவிட்டது. எவரும் எதிரே நின்று பேசவே அஞ்சும், தன்னிடம் ஒரு ரஷ்யன் இவ்வளவு அலட்சியத்தோடு கேள்வி களை அடுக்கி மடக்குகிறுனே என்று அவர்நெஞ்சில்எழும் எண்ணம்அவரது முகபாவத்தில் நன்குபிரதிபலிப்பதை பார்த்தேன்.

பாவம்! அவருக்கு நான் விசித்திர மனிதன். எனக்கு அவர் ஒருஅதிசய புதிர்! அவர் மனிதனை மனிதனுக மதிக்காத வர்க்கத்தைச் சேர்ந்தவர் நான், தேவைக்கு மேல் திரட்டிக் குவிக்கிற மனிதனை மனிதனுக மதிக் காத ரகத்தைச் சேர்ந்தவன்.

இருவருக்குமிடையே சந்திப்பும் வாதமும் நடந்தால் எப்படி இருக் கும்? எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருந்தது.

எனது கேள்வி அவரது மூளை யையே ஒரு புதிய சுழற்சியில் சுழல விட்டுவிட்டதென்று கருது கிறேன். ஏனெனில், என் கேள்வி அவரது செவிகளை ஊடுருவியவுடன் அடி வாங்கிய அல்லது அதிகமாகக் குடித்து விட்ட மனிதன் மாதிரி அவர் அயர்ந்து போனுர்.

நான் விடவில்லை, 'அரசாங்கம் தான் உங்கள் உடமையென்று ஒரு விதமாய்க் கூறி விட்டீர்கள். மதத் தைப் பற்றி உங்கள் அபிப்பிராய மென்ன?' என்று சற்று குழைவாகக் கேட்டேன்.

அவர் நிமிர்ந்தார்! என்னைப் பார்த்தார், 'ஏ குறும்பு பிடித்தவனே வீணில் என்னை என்னென்னவோ கேட்டுத் தொந்தரை செய்கிறுயே' என்று அவரது ஹிருதயம் கெஞ்சு வதை, அவர் கண்கள் என் கண்ணி டம் முறையிடுவது மாதிரி இருந்தது அவர் என்னைப் பார்த்த பார்வை.

அதற்காக நான் எதுவும் இரக்கம் காட்டுவதாக இல்லை.

மக்களுக்காக உள்ள சர்க்காரையே சொந்த நலனுக்காக நெட்டி வாங்கு கிற அந்தப் பணக்காரனின் இரும்பு இதயத்தில், கொஞ்சமாவது மிருதுத் தன்மையை ஏற்றுவோமென்பது எனது நிச்சயமாகி விட்டது. எனவே நான் அவரை இலேசில் விடுவதாக இல்லை.

திரும்பவும் கேட்டேன்,மதத்தைப் பற்றி அழுத்தமாக,

இம்முறை அவர் தேறிவிட்டார். பல கோடி மக்களின் உழைப்பை எளிதாயும்—ஏனமாயும் பணமாக மாற்றி ஏதுக் களிப்பேறிய நபரல் லவா? இதுவரை குழைவு காட்டிய அவர் முறுக்குற்று விட்டார். திரும் பினுர். 'என்ன கேட்டாய்?'—அக் கேள்வி ஒரு நெருப்புத் துண்டு மாதிரி வந்து விழுந்தது. நான் கொஞ்சம் தணிந்தேன். தணிந்ததை அவர் உபயோகித்துக் கொண்டு, இன்னுஞ் சற்று வேகமாக 'என்ன கேட்டாய்?' என்ருர் மீண்டும்.

அதே வேகத்தை இரட்டிப்பாக்கி 'மதத்தைப் பற்றி' என்றேன் நான்.

'ஓ! மதமா... அதுவும் கிட்டத்தட்ட எங்கள் அரசாங்கம் மாதிரிதான்— என்னைப் பொறுத்தவரை!

கிறித்துவர் ஒவ்வொருவரும் மதத் தின் பெயரால் எதையும் தியாகிக்கத் தயங்காதவர்கள்; நான் கோவிலுக் குச் செல்லுவேன். எல்லா ஏழை களும் அங்கு வருவார்கள். பயபக்தி யோடு ஆண்டவனைத் துதிப்போம். துதித்து விட்டு மக்களுக்குப் போதிப் பேன். ஏழை மக்களுக்கு அன்பான சொல்லும், பொறுப்பான போதனை யும்தானே முக்கியம். அதைச் செய் வேன். அவர்கள் ஏற்பார்கள். அதன் மூலம் அவர்கள் அத்தனை பேரு மெனக்கு உடையவர்களாகி விடுவார் கள். சொல்லில் அன்பும், போதனை யில் தாய்மையையும் குழைத்துக கொடுத்துவிட்டால், எவ்வளவு வேக மான—விவேகமான ஏழைகளையும் மடக்கி மடியில் போட்டுக் கொள்ள லாம்.

நான் தேவாலயத்தில் பிரசங்கிக்க ஆரம்பித்து விட்டால், கூடியுள்ள மக் களின் கவனமும்-பற்று மென்னைக் குவிந்து விடும். அவ்வளவு அற்புத மாக ஆண்டவனைப் பற்றி விமர்சிப் பேன். அந்த விதமெப்படியிருக்கும் தெரியுமா?'' வென்று கூறி விட்டு மூச்சு விட்டார்.

[இன்னும் வரும்]

கொஞ்சம் கவனியுங்கள்!

ஆளுக்கொரு **சோடுல்**

குழந்தைக்கொரு "ஆரெஞ்ஸ்"

கிரைப்-டில்-வாட்டர்

[இரண்டும் வீட்டுக்கு வீடு இன்றியமையாதவை]

தயாரிப்பு:— பாரத் டிரக் ஹௌஸ், மதுரை.

உரிமை:- டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை, அண்ட் சன்ஸ்.

பொதுஜன வாக்கு

பாடப் புத்தகத்திலும் புரட்டா?

அன்பு ஆசிரியருக்கு, வணக்கம்!

ஐயா, சுதேச சரித்திரம் என்ற பெயரால் 3ம் வகுப்பு மாணவர்களுக்கென்று வித்வான் எஸ். முத்து ஐயங்கார் பி. ஏ. எல். டி. என்பவர் எழுதிய புத்தகத்தை வி. சு. சுவாமிநாதன் கம்பெனியார் பிரசுரித்திருக்கின்றனர். அப்புத்தகத்தை டெக்ஸ்ட்புக் கமிட்டியும் அங்கீகரித்திருக்கிறது.

அதில், சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வமாகிய கண்ணகி சிலையை, இமயமலையில் கல்லெடுத்துச் செதுக்க எண்ணி, இமயம் சென்று கல்லெடுத்து, கங்கையில் நீராட்டிவந்து தனதுநாட்டில் கண்ணகிக்குக் கோயில்கட்டினான் என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால் செங்குட்டுவனைக் கேலி செய்து எதிர்த்த கனக—விசயனை வென்று அவர்கள் தலையிலேயே இமயத்திலிருந்து எடுத்தகல்லைச் சேர நாடுவரை சுமக்கச்செய்ததாகச் சரித்திரம்.

இது அப்புத்தகத்தில் வேண்டுமென்றே விடப்பட்டிருக்கிறது. அதாவது, செங்குட்டுவனை எதிர்த்த சில வடநாட்டு மன்னர்களை வென்று கண்ணகி சிலைக்கு கல்கொண்டுவந்ததாக மட்டும் குறிப்பிட்டிருக்கிறது. இதுதவிர,

ராஜேந்திர சோழர் கடாரத்தை வென்றார்—அந்தக் கடாரத்தை இப்பொழுது பர்மா என்று சொல்லுகிறோம் என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

ராஜேந்திர சோழன் வெற்றி பெற்ற கடார தேசத்திற்குப் பெயர் பர்மா. தானா?

இம்மாதிரி,

சரித்திரத்தை மறைத்துப் புத்தகமெழுதிப் போதிக்கவைத்தால் நமது குழந்தைகளுக்கு சரித்திரஞானம் எப்படி உருப்படும்? இதை துரைத்தனத்தார் எப்படி அநுமதித்தனர்? புத்தகப் பரிசீலனைக்கமிட்டியில் இந்த அளவுகூட சரித்திரம் தெரியாதவர்களாகவா இருக்கிறார்கள்? இதைப் பற்றி 'கண்ணகி'யில் கொஞ்சம் எழுதினால் நல்லது.

ஆர், ராகவன்.

நகர சபையாரின் கவனத்திற்கு

அன்புள்ள ஐயா,

மதுரை நகரில் உள்ள வீடுகளின் நம்பர்கள் கதவுகளில் பொறிக்கப்டிருக்கின்றன. பகல் நேரங்களில் எல்லா வீடுகளின் கதவுகளும் திறக்கப்பட்டிருப்பதால், புதிதாய் வருவோர்கள் வீட்டு நம்பரைப் பார்த்து குறிப்பிட்ட வீட்டை அடைவது பெருங்கஷ்டமாக இருக்கிறது. மேலும் அனேக வீடுகளின் கதவுகளில் பொறிக்கப்பட்டுள்ள நம்பர்கள் அழிந்துபோயுமிருக்கின்றன. பொதுவாக வீட்டின் நம்பர்கள் கதவுகளில் இருப்பது எல்லோருக்குமே கஷ்டம் தான். எனவே, வீட்டு நம்பர்களை கதவுகளில் பொறிப்பதற்குப் பதிலாக முகப்பு நிலைகளில் பொறித்துவிட்டால் இரவு-பகல் எந்த நேரத்திலும் வீட்டுநம்பரை எளிதில் பார்த்து குறித்தவீட்டை அடைவது எல்லோருக்குமே இலகுவாக இருக்கும். மலேயா, பர்மா முதலிய நாடுகளின் நகரங்களில் உள்ள வீடுகளின் நம்பர் நிலைகளில் தான் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

அதே மாதிரி மதுரை நகரிலும் ஆக்கும்படி முனிசிபாலிட்டியாரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுகிறேன். வணக்கம்.

மார்த்தாண்டன்.

தூத்துக்குடி நகரசபையாரின் கவனத்திற்கு

ஆசிரியர் அவர்களுக்கு: வணக்கம்!

இந்திய சுதந்திரத்திற்கு ஆதியில் அஸ்திவாரமிட, எத்தனையோ தியாகிகள் தமது உதிரத்தையும், எலும்புகளையும், உயிரையும் உதவி இருக்கின்றனர்.

தென்னாட்டைப் பொறுத்தவரை சுதந்திரத்துக்காகவென்றே உயிரைக் கொடுக்கத் துணிந்த ஒரு சிலரில் ஒருவர் **வாஞ்சி ஐயர்** என்ற வீர வாலிபர்!

இவரால் சுதந்திரப் போராட்டத்தின் தென் பகுதி நிலைமை உச்சம் பெற்றது என்பது கூட மிகையல்ல.

அன்று சுதந்திரத்திற்கு இடையூராக நின்ற ஆஷ் என்ற வெள்ளை அதிகாரியை பட்டப் பகலில் சுட்டுக் கொன்று, தானும் வீர மரணத்தில் குளித்தவர் வீர வாஞ்சி ஐயர்.

வாஞ்சி ஐயரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆஷ் துரையின் ஞாபகார்த்தமாக ஒரு மண்டபத்தை தூத்துக்குடியில் நிறுவினர் வெள்ளை ஆட்சியினர். அவர்கள் செய்தது சரி. ஆனால் நமது ஆட்சி எட்டு வருடங்களாக நடக்கிறது. ஆனால் ஆஷ் துரையின் நினைவு மண்டபம், வாஞ்சி ஐயர் நினைவு மண்டபமாக இன்னும் மாறவில்லை—மாற்றப்பட வேண்டாமா?

தேசிய வெற்றிக்கு இடர்புரிந்த ஒருவனை ஒரு தேசியன் கொன்றான்—தானும் மடிந்தான். ஆனால் அவன் மடிவில் உருவான சுதந்திர நாட்டில் தேசியத்திற்கு இடர்புரிந்த ஒருவனுக்கு நினைவுச் சின்னம் இயங்குவது மகாக் கேவலம் அல்லவா? இதுவரை தூத்துக்குடி மக்களும், முனிசிபாலிடியாரும் இதில் அக்கரை காட்டாதிருந்தது வருந்த வேண்டிய விஷயம். இனியும் ஆஷ் மண்டபம், வாஞ்சிமண்டபமாக மாறாதிருந்தால் அது பரம்பரைக் கேவலம் என்பதைத் தூத்துக்குடி முனிசிபாலிட்டிக்கு வற்புறுத்துங்கள்.

வாசவன்—நெல்லை

படித்தோம் படியுங்கள்

வீரமாமுனிவர்

எழுதியது என். எம். நாகரத்னம் இரங்கூன் 'ரசிகரஞ்சினி' உதவி ஆசிரியா

பதிப்பாளர்: ராஜன் அன் சன்ஸ் 124 முகல் வீதி இரங்கூன். விலை: 75 பியா.

மேற்கு நாட்டிலே பிறந்து தமிழ்நாட்டிற்குவந்து, தமிழ்நாட்டில் வேற்றுமொழி முதலிடம் பெற்று இயங்கிய கட்டத்தில் தமிழ் மொழியின் தகைமையை யுணர்ந்து அதற்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்து தமிழில் பல ஆதர்சக் கருத்துகளை உண்டாக்கி உயர்வு பெற்றவர் வீரஞானி வீரமாமுனிவர் யென்பது அதிசயமல்ல. ஆனால் நேற்று இயங்கிய மேதைகளையே இன்று மறந்துவிடும் மக்கள் நிறைந்த இன்று நூற்றாண்டுகள் கடந்து நினைவிலிருந்தே தேய்ந்துவிட்ட ஒரு அறிஞரை நமக்கு அறிமுகப்படுத்தத் துணிந்த இதன் ஆசிரியரின் துணிச்சல்தான் அதிசயம்!

வீரமாமுனிவரை இன்றையத் தமிழகம் சரிவரப் புரிந்துகொண்டிருக்கமாட்டாது. மேலும் அது ஒரு பழைய சங்கதியும்கூட. ஆனால் அவசியம் தமிழர்களுக்கு தெரிவிக்க வேண்டிய வரலாறு.

ஆயினும் படிப்பதற்கு பிடிக்க வேண்டுமே! பிடிக்கும்படி எழுதிவிட முடியும் என்று ஒரு சவால் விடுத்துவிட்டு இதை நல்ல தமிழில் வேய்ந்திருக்கிறார் ஆசிரியர் நாகரத்தினம்.

கயமை வடிவம் பெற்ற காதலும், அதில் ஏற்படும் அநாகரீக சேஷ்டைகளான கண்ணடிப்பது, மூக்கைச் சொறிவது, கழுத்தை வெட்டுவது போன்றவற்றை விளக்கமாக யெழுதினால் அப்புத்தகம் பலபதிப்புகளை யெட்டும் இன்றையநாளில் நல்லதைச் செய்து அதைச் சொல்லிய வீரமாமுனிவரைக் கூட்டிவந்து காட்டினால் அவரை யாரென்று கேட்டுவைக்கக் கூடச் சள்ளைப்படுவோர்தான் இன்றைய தமிழ் நாட்டில் மெஜாரிட்டி.

என்னதாயினும் பார்த்து விடுவோமென்று வீரமா முனிவரைக் கூட்டி வந்திருக்கிறார் அன்பர் நாகரத்தினம்.

நல்லதொரு வரலாறு-வரலாற்றுக்கு வேண்டிய விஷய ஓட்டமும் போக்கும் இதில் நிறைவுபெற்றிருக்கிறது. வரலாற்றில் உள்ள பழமையை ஆசிரியர் நாகரத்தினம் புதிய தமிழால் சலவை செய்து பளிச்சிட வைத்திருக்கிறார். நல்வாழ்வை விரும்புகிற ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டும்.

நான்கண்ட ரஷ்யா

எழுதியது: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

வெளியீடு: காவேரிப்பதிப்பகம் புதுக்கோட்டை, திருச்சி ஜில்லா விலை: இரண்டு ரூபாய்.

இது ஒரு பிரயாண நூல். ஆனால் சரித்திரச் சோபை படர்ந்து படிக்கப் படிக்க பரவசமூட்டுகிறது.

யோகி சுத்தானந்தரின் எழுத்து வன்மை தமிழர்களுக்குத் தெரிந்ததே. சின்னஞ்சிறிய வார்த்தைகள் இரண்டு வார்த்தைகளுக்கு ஒரு அரைப்புள்ளி; அதற்குள் அற்புதமான விஷய அடக்கம்; அதைத் தாங்கிக் கொண்டு சிட்டுக் குருவி தாவி வருவதுபோல் தாவிவந்து படிப்போரைக் கொஞ்சும் தன்மையது சுத்தானந்தரின் தமிழ் நடை. அவர் பல பெரிய தத்துவங்களை எல்லாம் சின்னஞ்சிறிய வார்த்தைகளில் அடைத்து அனுபவம் பெற்றவர். ஆகவே இந்தப் பிரயாண நூலை ஒரு சரித்திரமாகவும் ஆக்கி, அதில் ரஷ்யா ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்ட்ரியா போன்ற நாடுகளின் நகரங்களை அப்படியே படப்பதிவு மாதிரி செய்து காட்டி விட்டார்.

உலக சமாதான மகாநாட்டிற்காக சென்ற யோகியார் தாம் கண்ட அனுபவங்களை அப்படியப்படியே, சுவைக்கும் ரீதியில் இதில் தந்திருக்கிறார்.

ஆனால் இதில் யோகியாரின் கருத்துகள் நாட்டுக்குநாடு மாறுபட்டுக் காண்பது ஒரு குறையாகப் படுகிறது. மேலும் ஹிட்லர், முசோலினி போன்ற தலைவர்களை மோசமான முறையில் வர்ணித்திருப்பது ஒரு மாதிரியாக இருக்கிறது.

போகும் இடங்களில் குட்டிச்சுவர்களையும், அழிவுகளையும் கண்டால் உடனே அதற்குக் காரணம் ஹிட்லரின் வெறிதானென்று யோகியார் குறிப்பிடுகிறார்.

போரின் லட்சணம் அன்று எதுவோ. ஆனாலின்று அழிவுதான்! நாட்டாசைதான் போரின்கரு! நாட்டாசை இல்லாத வல்லரசு இன்று எது?

ஹிட்லர் போரை மூட்டினார். ஆனால் அவரை அதற்குத்தயாரித்தது யார்? இட்லர் ஆங்கிலோ-அமெரிக்கருக்குத்தான் எதிரி. அவர் அவருடைய நாட்டிற்கு நலனைத் தேடினார். அது அழிவில் முடிந்தது. வழி பிழையாக இருந்தாலும் நோக்கம் தேசியம் தானே. அதோடு 2வது உலகப் போரின் மூலம் உலகில் ஏற்பட்ட குட்டிச்சுவர்கள் ஒரு கோடி யென்றால் அதில் முக்கால் கோடிகுட்டிச் சுவர்களை உண்டாக்கியது ஆங்கிலோ அமெரிக்கர் என்பதை எவருமே மறுக்கமுடியாது.

வெள்ளையர் இட்லரை வசைபாடலாம்; ஏனெனில் அவர்கள் அனுபவித்துவந்த ஏகாதிபத்யத்தின் சாஸ்வதத்தைக் காலி செய்தவர் இட்லர் யென்பதால், ஆனால் யெதற்கும் பாகுபாடு காட்ட வேண்டாத யோகியார், குட்டிச்சுவர்களுக்கு, இட்லர் மீது குற்றமேற்றுவது வேண்டாதது யெனினும் உயரிய தன்மையில் இப்புத்தகம் யெழுதப்பட்டிருக்கிறது.

அற்புதமான அமைப்பு! அட்டைப் படமே புத்தகத்தின் உள்ளழகுக்கு ஒரு யெடுத்துக்காட்டு!

சமய விளக்கம்

எழுதியது: யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார்.

வெளியீடு: காவேரி பதிப்பகம் பு... கோட்டை. விலை: 4 அணா.

சமயம், கடவுட் பாங்கு, தூய வாழ்வு, வாழும் வகை போன்ற மனிதத் தேவைகளை அழகிய முறையில் தெள்வாக விளக்கப்பட்டிருக்கிறது.

சீறும் சிங்களத்திற்கு அபாய அறிவிப்பு

எழுதியது டி.எம். பீர்முகம்மது

வெளியீடு கணேஷ் பிரசுரம். த. பெ. நிர்:1782 சென்னை-1 விலை எட்டணா.

சிங்கள நாட்டில் சிதைந்தவாழ்வில் அல்லலுறும் தமிழ் மக்களின் நிலைமையையும், அவர்களை இக் கதிக்கு இலக்காக்கிவிட்ட இன்றைய சிங்களத்தார்பாரையும் சித்தரிக்கிறது இப் புத்தகம்.

வேகமாக இருக்கிறது. ஆனால் வார்த்தைகளில் உள்ள முறுக்கு கருத்தில் இல்லை. சொற்களை கூராக்க வேண்டுமென்ற முனைப்பில் கருத்துகளைக் கசக்கக்கூட விட்டுவிட்டார் ஆசிரியர். ஒரு உயிர்ப் பிரச்னைக் குரிய இம்மாதிரி சொற்பொழிவுப் புத்தகங்களில் சொற்களைவிட விஷயத்தில் அதிகக் கவனம் காட்டப்பட்டால் நல்லசேவையாகவும், இருக்கும்.

ஜீவரத்தினம்

எழுதியவர்: எ.எல். அருமூர்த்தி செட்டியார். பெரியகுளம். விலை நான்கணா.

நல்வாழ்வுக்கு ஆகம ரீதியில் வழி சொல்லும் நல்ல புத்தகம் இது. படியுங்கள்.

பர்மா நாடு

(சுதந்திர தின மலர்)

ஆசிரியர்: வி. எச். டேவிட். அலுவலகம்: பர்மா நாடு, வாரப் பதிப்பு. 482 டல்லவுசி வீதி இரங்கூன். மலர் விலை 75 பியா.

2வது போரின் போது தவிர்க்க முடியாத நிலையில் நிறுத்தப்பட்ட 'பர்மா நாடு' மீண்டும் புதுப் பொலிவோடு வெளிவந்திருக்கிறது.

போருக்கு முன் பர்மாநாடு, பர்மா இந்தியரின் நாடித்துடிப்பாகவும், எண்ணத்தின் எதிரொலியாகவும் செயல்பட்டது மறுக்க முடியாத உண்மை.

அதன் ஆசிரியர் திரு. டேவிட் தேசிய ஆர்வமிக்கவர். தியாகபுத்தி நிரம்பியவர். சளைக்காத ஊழியர். அவரின் இடையறாத ஆர்வத்தின் எடுத்துக்காட்டுதான் இந்த மலரும் இதைத் தொடர்ந்துவரும் வாரப் பதிப்பும்.

போர்க்காலத்தில் திரு. டேவிட், தாயகம் சென்று விட்டதால் அவரது சேவை நேதாஜி அரசாங்கத்திற்கு வாய்க்காமற் போய்விட்டது. ஆயினும் அவர் அயராது முயன்று பர்மா நாடு வாரப்பதிப்பின் முதல் அஸ்திவாரமாக இந்த மலரை அருமையாக கொண்டு வந்திருப்பது பாராட்டத்தக்கது.

இந்த மலரில் நெஞ்சைக்கவ்வும் பல அரிய விஷயங்கள் மின்வெட்டுகின்றன. முந்திய பர்மாவும், இன்றைய பர்மாவும் இந்த மலரில் நன்கு படம்பிடித்துகாட்டப்பட்டிருக்கிறது. பர்மாநாடு வளர ஒவ்வொரு தமிழ் மகனும் ஆக்கமளிக்க வேண்டியது அவசியம். பர்மாவாழ் தமிழர்கள் நலனுக்காக பர்மாநாடு துணிந்து போராடுமென்பதற்கு இம்மலரில் பெருக்கெடுத்தோடும் கருத்துப் பிரளயமே போதிய நிருபணம்.

நேதாஜி ஜனநாயக முன்னணி

வாலிபர் சங்கம்

அம்மன் சன்னதி [புஷ்பக்கடை]

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 10-8-55ல் மாலை 7-மணிக்கு உயர் திரு. என். சீதாபதி அவர்கள் தலைமையின் கீழ் [கோவில் சமீபம் உள்ள] காந்தி. சவுக்கத்தில் நடந்தேறியது. ஷெ கூட்டத்தில் கீழ் காணும் விஷயங்கள் பேசி முடிவு செய்யப்பட்டன.

சங்கத்தின் ஆண்டறிக்கையுடன் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கப் பட்டன.

வருகிற 23-1-56ல் நேதாஜி அவர்களின் பிறந்த தினத்தை தலைவர் உயர்திரு. உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் தலைமையின் கீழ் வெகு விமரிசையாக கொண்டாடுவதென்றும், சங்கத்தை தமிழ் நாடு பார்வர்டு பிளாக் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இயங்க வேண்டுமென்றும், மற்றும் பல விஷயங்கள் பேசி முடிவு செய்யப்பட்டன என்று நே. ஜ. மு. வா. ச. செயலாளர் ஆர். எல். அழகர் அறிவிக்கிறார்.

ஸ்வர்க்காவின்

சந்திரா

டால்கம்

பௌடர்

மிகச்

சிறந்தது

கொழும்பு நகரில்

"கண்ணகி" ஏஜண்டு

பி. முத்துராமலிங்கம்

79. டாம் தெரு,

கொழும்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துக்கு எதிர் புரிகிறது என்பதற்கு ஒரு அடையாளம் தான் கோவா நிகழ்ச்சி!

அதிகாரத்தை அளவிற்கு மேல் ஜீரணித்திருக்கிற நேருவுக்கு மாதா கோவில்களின் தலைவி என்ற முறையில் மாட்சிமிக்க அரசியார் கடுமையாக எச்சரித்து இந்தியா. கோவா, சிறப்பாக தூர கிழக்கில் கிருத்துவ இனத்தைக் காத்தருள வேண்டும்.''

என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

சல சாரின் கையாளான இந்த திரர், எழுதிய கடிதம் பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் மூலம் அரசி எலிசபெத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதே அரசி தான் இந்தியா அங்கம் வகிக்கிற காமன் வெல்த்துக்குத்தலைவியும்.

அந்தக் குண்டர் தாசன்ஜாபர் இதோடு விடவில்லை.

காஷ்மீர்ப் பிரவேசத்தின் போது இந்தியப் படையினர் தாக்குவதை தெரிந்து கொள்ளும் பொருட்டு, பல முனைகளுக்கும் பார்வையாளர்களை அனுப்பும் படி கராச்சியில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகருக்கும் அறிவித்திருக்கிருர்.

இதுபோக, பச்சைப் பாகிஸ்தானிகளையே திரட்டி ஒரு குண்டர் கூட்டத்தை காஷ்மீரில் சத்யாக்ரஹம் செய்ய பழைய நவகாளி ராக்ஷச மேதை—அதிகார வெறியின் தலைவன்— சுரவர்த்தி ஒரு இயக்கம் தயாரித்திருக்கிருர்.

இந்த அயோக்கிய சிகாமணி சுரவர்த்தி ஆகஸ்ட் 19—ல் ஒரு அறிக்கையும் விடுத்திருக்கிருர்.

அதில், கோவா சத்தியாக்ரஹத்திற்காக நேருவைக் கண்டித்து, இதேமாதிரி ஒரு சத்யாக்ரஹத்தை நேரு, காஷ்மீரில் விரும்புகிருரா என்றும் கேட்டிருக்கிருர்.

- இந்தியாவைத் தொல்லைப் படுத்தும் இவ்வித நிகழ்ச்சிகள் அதிவிரைவில் காஷ்மீர் எல்லையில் நிகழவேண்டுமென்று மேற்கத்திய வல்லரசுகள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையிலும் நேருபிரான் அகிம்சைக்கு அர்ச்சனை செய்து கொண்டிருக்கிருர்!

நன்றி அறிவிப்பு

மன்மத ஆண்டு ஆவணித் திங்கள் 17-ம் நாள் (2–9–55) வெள்ளியன்று எமது **"சைபால்"** பாக்டரியில் நடந்த எனது புதல்வி **எஸ். சூர்யகாந்தா**வின் முதல் ஆண்டு நிறைவு—காதணி விழா வைபவங்களுக்கு. வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் நேரில் விஜயம் செய்து குழந்தையை வாழ்த்தி, பரிசுகள் பல வழங்கியவர்களுக்கும் வெளியூர்களிலிருந்து ஆசிச் செய்திகள், பரிசுகள் அனுப்பிய அன்பர்கள் அனைவர்களுக்கும் இதன் மூலம் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

அன்புள்ள,

எம்.இராமலிங்கம், எஸ்.சுப்பிரமணியம்,

பார்ட்னர், ''சைபால்'' கம்பெனி, மதுரை.

பார்ட்னர், ''சைபால்'' கம்பெனி, மதுரை.

துளசி

[தொடர் கதை]

- வரிக்கு வரி, புதிய கருத்துக்கள் படமெடுத்தாடும்
- நெஞ்சைச் கவ்வி இழுக்கும் நடப்போட்டம்
- குடும்பக் கலை படர்ந்த கலைக் காவியம்

'கண்ணகி'யின்

அடுத்த அலையில் தொடங்கும்]

எழுத்தில் பண்பட்ட கதாசிரியர் எழுதுகிருர்!

எதிர்பாருங்கள்!

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு திடகாத்தி மளிக்கும் சிறந்த உணவு

ராஜாபார்லி பிஸ்கட்ஸ்

ஸ்தாபிதம்: 1926
நேம் அன் டிசைன் ரிஜிஸ்டர்டு
நிர். 143106
போன் நிர். 334.

திண்டுக்கல் ரோடு—மதுரை
கிளை: மெயின் ரோடு திண்டுக்கல்.

வெளியிட்டதும், ஆசிரியரும் ஆர். சக்திமோகன் (ராகவன்) அச்சிட்டது: விஜயா பிரிண்டர்ஸ் லிமிடெட், டவுன் ஹால் ரோடு—கண்ணகி அலுவலகம். 80, மேல ஆவணிமூலவீதி மதுரை.

9 - SEP 1955